**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 87** **நாள்: 10.02.2026**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வருகின்ற 12.02.2026 அன்று பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் கொருக்குப்பேட்டையில் இரயில்வே 2பி சந்திக்கடவில் ரூபாய் 96.04 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள மேம்பாலத்தினை திறந்து வைக்கப்படவுள்ளதை முன்னிட்டு, முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்து மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், இன்று ஆய்வு மேற்கொண்டனர்.**

வடசென்னை பகுதி மக்களின் நீண்ட கால தேவையினை நிறைவேற்றிடும் வகையில் கொருக்குப்பேட்டை-மணலி சாலையில் போக்குவரத்து நெரிசலை வெகுவாக குறைத்திடும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வருகின்ற 12.02.2026 அன்று பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் தண்டையார்பேட்டை மண்டலம், கொருக்குப்பேட்டை மணலி சாலையில் இரயில்வே 2பி சந்திக்கடவில் ரூபாய் 96.04 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள மேம்பாலத்தினை திறந்து வைக்கப்படவுள்ளதை முன்னிட்டு, முன்னேற்பாடுப் பணிகள் குறித்து மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் இன்று (10.02.2026) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

மேலும், கொருக்குப்பேட்டையில் இருந்து எண்ணூர் செல்லும் சாலையில் போக்குவரத்து நெரிசலைக் குறைத்திடும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ரூ.75 கோடி மதிப்பீட்டில் கொருக்குப்பேட்டை-எண்ணூர் 2ஏ புதிய மேம்பாலம் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வருகின்ற 12.02.2026 அன்று அடிக்கல் நாட்டிப் பணிகளைத் தொடங்கி வைக்கப்படவுள்ளதை முன்னிட்டு, முன்னேற்பாட்டுப் பணிகள் தொடர்பாக, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் இன்று நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வின்போது, மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஜே.ஜே எபினேசர் (ஆர்.கே நகர்), திரு.ஆர்.டி.சேகர் (பெரம்பூர்), மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், துணை ஆணையாளர் (பணிகள்) திரு.வி.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., மண்டலக் குழுத் தலைவர் திரு.நேதாஜி யு. கணேசன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு** : **இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**